உ

சிவமயம்

# பலாலி சித்திவிநாயகர் ஆலய



# கும்பாபிஷேக மலர்

**21-8-80.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வணக்கம்

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை

கணபதி துணை

தேவஸ்தான பிரதம குரு, சிவாசார்ய ராஜாமணி

# பிரம்மஸ்ரீ. ச. தியாகராஜாக் குருக்கள்

வழங்கிய

# ஆசியுரை

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு"

உலகம் முழுவதிலும் வியாபித்து விளங்கும் இறைவனின் அருளைத் திரட்டிப் பெறுவதற்கு உகந்த ஒரேயொருவழி ஆலயத்தைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்தலாகும். அஷ்டமூர்த்த வடிவினனாக விளங்கும் இறைவனை, மந்திரம், கிரியை, பாவனைகளினால் திருவுருவச் சிலைகளினிடத்தே நிலை பெறச் செய்தலே பிரதிஷ்டா கிரியைகளின் உட்பொருளாகும்.

கும்பாபிஷேகத்திற்கு அங்கமாக நிகழ்த்தப்படும் கிரியைகள் அனைத்தும் நாட்டில் பல்வேறு விதமான மங்களங்களை யும், வெற்றிகளையும், சுபீட்சத்தையும், நன்மழையையும், நவதானிய விருத்தியையும். கிரக அனுகூலங்களையும் ஏற்படுத்துவதுடன் மக்கள் மனதில் ஐக்கியம், தர்ம சிந்தனை, ஆத்ம திருப்தி ஆகியவற்றையும் தரும். இதனாற்றான் இந்தக் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தி என்பர், இக் கிரியைகளின் பெறுபேறு பன்னிரண்டு வருடங்களுக்கு நிலைத்துநிற்கும். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படவேண்டும் எனவும், இதற்கிடையில் அஷ்டபந்தனத்திலோ மற்றும் எவற்றிலோ பழுது ஏற்படின் அதற்குரிய பரிகாரம் மட்டும் மேற்கொள்ளப்பட்டாற் போதுமெனவும் ஆகமங்கள் விளம்புகின்றன.

ஆகவே பெருஞ்சாந்தியாகிய கும்பாபிஷேகத்தைச் செய்யும் அன்பர்களுக்கு விநாயகப் பெருமான் திருவருளால் சகல சௌபாக்கியங்களும் உண்டாகும்வண்ணம் ஆசிகூறுகின்றேன்.

சுபமங்களம்.

பலாலி,
வசாவிளான்,
23-7-80,

இங்ஙனம்,
ச. தியாகராஜாக்குருக்கள்
பிரதிஷ்டா குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான சாய்ப்புச் சாமான்கள்,
பால்மா வகைகள், அன்பளிப்புச் சாமான்கள்
யாவும் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

# சிறீ நடராசா பிறதேர்ஸ்

இணுவில்

அண்ணா கோப்பி உடனுக்குடன்
உங்கள் முன்னிலையில்
வறுத்து அரைத்துக் கொடுக்கப்படுகிறது.

கிளைகள் :

இல 1, மத்திய சந்தை - சுன்னாகம்

இல. 4, நவீன சந்தை - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கிரியா கலாபமணி, சிவாகம ஞானசாகரம், சைவபூஷணம் கலாநிதி,
குருமணி, ஈசான சிவாசார்ய சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர்

# சிவஸ்ரீ. நா. சோமாஸ்கந்தக் குருக்கள்

வழங்கிய

## ஆசியுரை

பலாலி ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுக்கு ஆலயம் அமைத்துச் சிறந்த முறையில் குடமுழுக்கு விழா நிகழவிருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதொன்றாகும். உலகில் மக்கள் கற்றுத் தேறவேண்டிய கலைகள் அறுபத்து நான்கு என்பர். அவ்வளவையும் வாழ்நாளிலே கற்றுத் தேறுவதென்பது இயலாததொன்றாகும். ஆயினும் இத்தனை கலைகளையுங் கற்காமலே தேர்ச்சிபெறுவதற்கு விநாயகப் பெருமானின் கருணை இருந்தால் போதும் எனப் பெரியோர் கூறியுள்ளனர். "நற்குஞ்சரக் கன்று நண்ணிற் கலைஞானம் கற்குஞ்சரக் கன்றுகாண்" என்பதால் இதை உணரலாம். பிரணவப் பொருளாம் ஞானத்தின் பிறப்பிடமாய் விளங்கும் விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகம் சிறக்கவும் பக்தர்களுக்கு அவனது கடாட்சம் பொலிந்து விளங்கவும் நாமும் வாழ்த்துவோமாக.

சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள்
(சிவானந்த குருகுல பரிபாலன சபைத் தலைவர்)

ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.

அன்பளிப்பு

கட்டிட ஒப்பந்தகாரரும், மரம், தளபாடம்,
விறகு முதலிய பொருட்கள் விநியோகஸ்தரும்

# எஸ். நடராசா

ஏழாலை வடக்கு — சுன்னாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அகந்தழீக் களிப்பாம்!'

க. உமாமகேஸ்வரன்

ஐந்து திருக்கரமுடைய மூர்த்தி என்றால் அது ஆனைமுகப் பெருமான் ஒருவரையே குறிக்கும். ஐந்தாவதான அவர் திருக்கரத்தை வியன் கரமென்பர் ஆன்றோர். வியப்பை விளைவிக்கும் துதிக்கையாகிய திருக்கரம் விநாயகருக்கு மட்டுமே உரிய சிறப்புத் திருக்கரமாகும்.

'ஐந்து கரத்தனை ... ... புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே' எனத் திருமூலரும், 'பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்' என அருணகிரிநாதரும் பிறரும் போற்றினரே தவிர அதற்கும் மேலே எதற்காக ஐந்துகர மூர்த்தியாக ஆனைமுகத்தண்ணல் எழுந்தருளித் திருவருள் பாலிக்கிறாரென்று சிந்தித்ததில்லை. நக்கீரதேவநாயனார் மட்டும் ஆறுமுகப் பெருமான் பன்னிரு கரத்தனைத் திகழவேண்டிய அவசியம் என்ன என்று சிந்தித்திருக்கிறார். அச் சிந்தனையின் தெளிவே 'விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியதொருகை' என்பது முதலாக 'ஒரு கை வான்அர மகளிர்க்கு வதுவைசூட்ட ஆங்கு அப் பன்னிருகையும் பாற்பட இயற்றி' என்பது வரையிலான திருமுருகாற்றுப்படை அடிகளாக அமைந்திருக்கிறது.

தணிகைப்புராணம் பாடத்தொடங்குகின்ற கச்சியப்ப முனிவரர் முதலில் ஸ்தல விநாயகராகிய ஆபச்சகாயனை அகந்தழீஇக் களிக்கின்றார். ஆனைமுகத்தோடு அவரின் ஐந்து திருக்கரங்களையும் தரிசித்த முனிவரர், ஆறுமுகனின் திருக்கரங்கள்பற்றிச் சிந்தித்த நக்கீரர் நெறி நின்று, ஆனைமுகனின் திருக்கரங்கள்பற்றிச் சிந்திக்கின்றார்.

விநாயகரது திருக்கரங்களி லொன்று பண்ணியமேந்தும் திருக்கரம், மோதகமேந்தும் அந்தத் திருக்கரம் அவருக்கு மட்டுமே பயன்படுகிறது. மற்றொரு திருக்கரத்திலோ பாலொளி வீசும் ஒற்றைத் திருக்கொம்பு விளங்குகிறது. கயமுகனைச் சங்கரித்துத் தேவருக் கபயமளித்த அந்தத் திருக்கரம் தேவருக் கிடுக்கண் வரும்போதெல்லாம் உதவவெனச் சித்தமாயிருக்கிறது. வியன்கரமான துதிக்கையிலோ இரத்தினமழுத்தித் தங்கத்தாலான அமுத கலசம் திகழ்கிறது. அன்னையுமத்தனுமாகிய பார்வதி பரமேஸ்வரருக்குப் பாதபூஜை செய்யவே அக் கலசம் அங்கிருக்கிறது. இனி எஞ்சியிருப்பவை இரண்டு திருக்கரங்களே. ஒன்றிற் பாசம் மற்றையதில் அங்குசம் எனப் பாசாங்குச தாரியாக விளங்குகிறாரே விநாயகர்; ஏன்? சற்றே திகைத்த கச்சியப்ப முனிவரர் அதற்கான காரணத்தையும் கண்டுபிடித்துவிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது உள்ளமாகிய காட்டிலே ஒரு யானை உலவுகிறது. மதம் பிடித்த கொடிய யானை அது. போதாதற்கு அதன் விழிகள் இரண்டும் வெறும் குழிகளே தவிர அவற்றில் ஒளியில்லை. ஆம்!, ஆணவமென்ற யானைதான் அது. மதம்பிடித்த கொடிய யானை ஒளியற்ற விழியும் உடையதானால் எத்தகைய தீமைகளை விளைவிக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமா? எனவே 'கண்ணில் ஆணவ வெங்கரி'யைப் பிணிக்கவேண்டும்; அடக்கவேண்டும். அதற்குப் பாசம், அங்குசம் ஆகிய இவையிரண்டும் வேண்டும். எனவேதான் ஆபச்சகாயனாகிய விநாயகப் பெருமான் எஞ்சிய தமது இரண்டு திருக்கரங்களிலும் பாசத்தையும் அங்குசத்தையும் ஏந்தி இருக்கிறான்.

பண்ணிய மேந்துங் கரந்தனக் காக்கிப்
பானிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி அரதனக் கலச
வியன்கரந் தந்தைதாய்க் காக்கிக்
கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரிசினேற் கிருகையு மாக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபச்
சகாயனை அகந்தழீக் கழிப்பாம்

கருணையே நின்பெயர் கணபதி எனப் பரவசமுற்று உருகும்படி செய்யும் கருத்தொன்று, கருத்துக்கு விருந்தாகும் செவிநுகர் கனியாகக் கனிந்திருப்பதையே இங்கு நாம் காண்கிறோம்.

தமக்காக ஒரு திருக்கரம், தேவருக்காக மற்றொரு திருக்கரம், அன்னைக்கும் அத்தனுக்குமாகப் பிறிதொரு திருக்கரமென இத்துணை பேருக்கும் தனித்தனி ஒவ்வொரு திருக்கரம் மட்டுமேயென நியோகித்துவிட்டுக் குற்றமே குணமாக அமைந்த — கரிசினேமாகிய — நம் பொருட்டு எஞ்சிய இரண்டு திருக்கரங்களையும் நியோகிக்கும் விநாயகப் பெருமானின் கருணைத் திறத்தை — தானே வந்தெம்மைத் தலையளித் தாட்கொண்டருளும் தண்ணளியை — புலப்படுத்தும் கச்சியப்ப முனிவரர், கணபதி என்ற கருணை வாரிதியில் நாமெலாம் முழுகு நாள் எந்நாளோ? என ஏங்கி விம்மிதமுறும்படி செய்துவிடுகிறார்.

கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரிசினேற் கிருகையு மாக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபச்
சகாயனை அகந்தழீக் களிப்பபாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணன்
(விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

சைவ சமயம் அனாதியானது. அச் சமயத்தின் கோட்பாடுகள் யாவும் சிவாகமங்களையே அடிப்படையாகவும் பிரமாணமாகவும் கொண்டு விளங்குவன. ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்யும் பொருட்டு இறைவனால் அருளிச் செய்யப்பட்ட முதனூல்களாக இவை எம்மவரால் போற்றப்படுகின்றன. ஆகமங்கள் கூறும் நான்கு பாதங்களில் கிரியாபாதம் என்ற பகுதியில்தான் திருக்கோயிலோடு தொடர்பான பல்வேறு கிரியை முறைகள் கூறப்படுகின்றன. கிரியா பாதத்தில், கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் ஆகிய நான்கு விடயங்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றன. கும்பாபிஷேகம் என்னும் நைமித்தியக் கிரியை பிரதிஷ்டை என்ற பெயரில் ஆகமங்களில் கூறப்படுகின்றது.

பிரதிஷ்டை என்ற சொல் குறிக்கும் பொருளை விளக்குவதன்மூலம் கும்பாபிஷேகத்தின் உட்பொருளை நாம் உணரலாம். 'பிர' என்னும் பகுதிக்கு 'சிறப்பாக' என்றும், 'நன்கு புலனாகும்படி' என்றும் பொருள்படும். 'திஷ்ட' என்னும் பகுதிக்கு 'நிற்றல்' என்றும் பொருளுண்டு. எனவே பிரதிஷ்டை என்று கூறப்படும்பொழுது 'ஏனைய இடங்களில் புலனாவதைக் காட்டிலும் சிறப்பாக நிலைநிற்றல், என்றும், 'ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும்படி நிற்றல்' என்றும் பொருள்படுகின்றது. இந்நிலையை வருவிக்குங் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிஷ்டை ஆகும். பாரெங்கணும் நிறைந்து பரந்து விளங்கும் பரம்பொருளை பசுவின் முலைகளினூடே பாலைத் தோற்றுவிப்பதுபோன்று திருக்கோயிலில் வெளிப்படுத்தும் கிரியையின் வழிகளையே ஆகமம் எமக்கு எடுத்துரைக்கின்றன. இந்நிலையில் ஆகம மரபு தொடர்ந்து நிலவ திருக்கோயில்கள் நிலைக்களனாக விளங்கிவந்துள்ளன.

பிரதிஷ்டை என்று கூறப்படும் கும்பாபிஷேகக் கிரியையின்போது குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இறைவனின் திருவுருவத்திற்கு நிகழ்த்தும் நீராட்டுதலே சிறப்பம்சமாகும். இக் கும்பாபிஷேகக் கிரியை இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலைநிற்கச் செய்யும் செயலைச் சுட்டுகின்றது.

இறைவன் எங்கும் பரந்து வியாபித்து நின்று அருளாட்சி புரிகின்றான். பரம்பொருளாகிய இறைவனை நாம் படிப்படியாக உணர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக்கூடிய வகையில், பல்வேறு விளக்கங்களை ஞானநூல்களெனப் போற்றப்படும் உபநிடதங்கள் எடுத்துக்கூறுகின்றன. இறைவனை 'சர்வ வியாபி' எனச் சுவேதாசுவதர உபநிடதம் கூறுகின்றது. இறைவன் சிறு அளவில் புலனாகும்வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயந்தானும் புலன்களால் செவ்விதாகக் கிரகிக்கப்பட முடியாதது. ஆகாயத்தைவிட வாயு சிறிது அதிகமாக உணரப்படக்கூடியதெனினும் கட்புலனாகாத தொன்றாகும். இதற்கு அடுத்தநிலை அக்கினியாகும். இது கட்புலனாகும் ஒன்றாகும். எமது வழிபாட்டு முறைகளில் அதிகம் இடம்பெற்று எம்மை ஈடேற்ற வல்லது. அக்கினியைப் பேணிப்பாதுகாப்பதும், தொடர்ச்சியாக வழிபடுவதும் எளிதான காரியமல்ல. இந்நிலையிலிருந்து சற்று எளிமையாக விளங்குவது நீர். எனினும் கிரகிக்கத்தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடுவது எளிதன்று. இதுவரை கூறியவற்றினின்றும் வேறானது ஐந்தாவதாகிய மண். இதனிடத்து இறைவனின் தெய்வீக அம்சங்களை நிலைநிறுத்தித் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் எமக்கு எளிதில் கைகூடும் நிலையாகும். இவ்வாறு இறைவன் அருவ நிலையினின்றும் இழிந்து, ஆகாயம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் பரந்து விரிந்து விளங்கும் தன்மையை தைத்திரிய உபநிடதம்

"ப்ரஹ்மண ஆகாசஃ ஸம்பூதஃ
ஆகாசாத் வாயுஃ
வாயோ ரக்நிஃ
அக்நே ராபஃ
அத்ப்யஃ பிருத்வீ"

எனக் கூறும்.

இறைவனை முற்றிலும் புலனாகாத நிலையிலிருந்து விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்காக விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே கும்பாபிஷேகப் பெருங் கிரியையின் அம்சங்களாக விளங்கக் காண்கிறோம்.

கும்பாபிஷேகக் கிரியையின் போது ஆகாய வெளியில் அமைவது யாகசாலை. அங்கு வளர்க்கப்படும் அக்கினியும் அதனோடு தொடர்புகொண்ட வாயுவும் குண்டங்களில் ஒருங்கு உறையக் காண்கின்றோம். வேதியின் மீதுள்ள குடத்தில் இருப்பது நீர். யாகசாலையில் இடம்பெறும் கிரியைகளின்போது இறைவன் படிப்படியாக வெளிப்பட்டு நிற்கும் தன்மையை உணரலாம். இவ்வாறு வெளிப்படும் நிகழ்ச்சி இறுதியில் பிருதிவியோடு தொடர்புகொண்ட திருவுருவத்தில் வந்து நிறைவுபெறுகின்றது. கும்பாபிஷேகக் கிரியையின் பின்னர், எங்கும் பரந்து விளங்கும் பரம்பொருள் ஏனைய இடங்களில் இருப்பதைக் காட்டிலும் திருவுருவத்தில் விசேட சாந்நித்தியம் பொருந்தி விளங்குகின்றான். இந்நிலை கும்பாபிஷேகத்தின் பின் என்றும் தொடர்ந்து விளங்கும் நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். இந்நிலையிலேயே இறைவனுக்குரிய பல்வகை உபசாரங்களான அபிடேகம், அலங்காரம், நிவேதனம், அருச்சனை, தோத்திரம் போன்றவற்றினால் இறைவனை முறையாக வழிபடத் தொடங்குகின்றோம்.

இறைவனுக்காக நிகழ்த்தப்படும் கிரியைகளில் பூசை சிறப்பு வாய்ந்ததாகும்' மனத்தில் பாவனைகளும், அதற்கேற்ப வாக்கில் மந்திரங்களும், உடம்பில் அதற்குரிய செயல்களும் ஒன்றுபட்டிருக்கும் நிலையே பூசையாகும். பூசை என்பதற்கு விளக்கம்தரும் ''காரணாகமம், எதனால் எல்லாச் செயல்களிலும் நிறைவும் தன்னிடத்தில் ஞானமும் உண்டாகின்றதோ அதுவே பூசையாகும்'' எனக் கூறுகின்றது. ''சைவஞ் சிவனுடன் சம்பந்தமாவது'' என்பது திருமூலர் மந்திரம். கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் மந்திரம், கிரியை, பாவனை இம்மூன்றும் சைவசித்தாந்தத் தத்துவப் பொருள்பொதிந்து விளங்குவன. திருக்கோயிலும் அதனுள் இருக்கின்ற தெய்வ வடிவங்களுமே மகா கும்பாபிஷேகத்திற்கு ஆதாரமாக உள்ளனவாகும்.

மகா கும்பாபிஷேகக் கிரியைகளில் சிவலிங்கத்திலுள்ள பிரசாத கலைகளையும் மற்றும் ஆறு அத்துவாக்கள், ஆன்ம தத்துவம், வித்யா தத்துவம், சிவதத்துவம் ஆகியவற்றினையும் நியாசங்கள் மூலமும் மூலமந்திர ஆவாஹனங்கள் மூலமும் கும்பத்திலிடத்தில் ஆகர்ஷணம் செய்து, பின்னர் யாகசாலையிலிருந்து மூலஸ்தானத்தி லுள்ள இறைவன்பால் இவற்றினைத் தொடர்புபடுத்துவது முக்கிய நிகழ்ச்சியாகும். பின்னர் மகா கும்பாபிஷேகத்தினால் மந்திரபூர்வமான தெய்வ சக்திகளை மூல பிம்பங்களிடத்தில் சேரும்படி பிரதிஷ்டை செய்வதால் மிக முக்கிய தத்துவப் பொருள் நிறைந்ததாகின்றது.

தனக்குமேல் நாயகன் இல்லாத பரம்பொருளே விநாயகர். விக்கினங்களைக் களைந்து, வினைகளை நீக்கி, ஆன்மாக்களுக்குத் திருவருள் பாலிப்பவர் விநாயகர். உயர் தத்துவப் பொருளாகிய பிரணவத்தின் திருவடிவமாக விளங்குபவர். விநாயகப் பெருமானுக்கு நிகழும் இக்கும்பாபிஷேகமும் உயர் தத்துவப் பொருளைக் கொண்டு விளங்குவதை நாம் சிந்தித்து உணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய தத்துவ ஞான இணைப்பு

பண்டிதர் மு. கந்தையா, B. A.

நமக்குரிய சமயம் சைவம். நமக்குரிய தத்துவ ஞானம் சைவ சித்தாந்தம். கடவுள் அருளைப் பெறுதலை முன்னிட்டு மக்கள் அனுசரிக்கும் ஆசார அநுட்டானங்களும் பக்தி முறையான வழிபாடுகளும் சமயம் என்ற பெயரில் அடங்கும். கடவுள், உயிர், உலகம் என்ற உண்மைப் பொருள்களைப்பற்றிய அறிவாராய்ச்சியும் விசாரணைகளும், தர்க்கரீதியான வாதப் பிரதிவாதங்களும் தத்துவ ஞானம் என்ற பெயரில் அடங்கும்.

உலகில் மற்றைய மதங்களைப் பொறுத்தவரையில் சமயமும் தத்துவ ஞானமும் சகலவிதத்திலும் ஒத்துப்போகும் அமைப்பு பெரும்பாலும் இல்லை. சிலசில மதங்களில் சமயமும் தத்துவ ஞானமும் ஒன்றிலொன்று முட்டாமல் தனித்தனி தன் தன்பாட்டிற் போய்க்கொண்டிருப்பதுமுண்டு. உருவ வழிபாடு அர்த்தமற்றது. கீழ்நிலையில் உள்ளவர்கள் அதைச் செய்யிற் செய்துகொள்ளலாம் - மேல்நிலை அநுபவத்துக்கு அது உதவாது என்று ஒரு தத்துவஞானம் பேசிக்கொண்டிருக்கும். அதே தத்துவ ஞானத்திற்குரிய மதத்தவர்கள் அநேகர் இறுதி வரை உருவ வழிபாடே செய்துகொண்டிருப்பார்கள். இப்படியான மதமும் ஒன்றிரண்டு நம்நாட்டிலேயே இருத்தல் கண்கூடு.

சைவத்துக்கு இந்தப் பொருந்தாப் போக்குக் கிடையாது. சைவத்தில் சமயத்துக்கும், தத்துவ ஞானத்துக்கும் அணுப்பதைக்குமளவுக்குக்கூட (அணுப்புதைக்குமளவு) வேற்றுமை கிடையாது. சைவ சித்தாந்தத்தில் நாம் என்னென்ன பேசுகிறோமோ அந்தந்தக் கருத்துகளுக்குச் சமதையான அநுசரணை சைவசமயப் பூஜை முறையில் இருக்கிறது. எனவே சிலர் கருதுவதுபோன்று எங்கள் பூஜைமுறை தனியாகச் சமயம் என்று ஒதுக்கப்பட வராது. சைவ சித்தாந்த நூல்கள் தனியாகத் தத்துவ நூல்கள் என்று ஒதுக்கப்படும் நிலையும் வராது. பூஜை முறை தத்துவ ஞானப் பின்னணியில்தான் நடைபெறுகிறது. தத்துவ ஞானம் பூஜை அநுசரணையின் அநுபவப் பேறாகத்தான் அடையப்படுகிறது. பூஜை காரியங்களுக்குக் கிரியை என்றொரு பெயர். தத்துவ சாஸ்திர அறிவுக்கு ஞானம் என்றொரு பெயர். கிரியையும், ஞானமுங் கைகோத்துத் திளைக்குங் காட்சி எங்கள் பூஜைக்குரிய தனிப்பெருஞ் சிறப்பாகும். இந்த அன்னியோன்ய நிலையை அறிஞருலகம் வெகுவாகப் பாராட்டுகிறது. மேல்நாட்டு அறிஞர்கள் இதனை வாயாரப் புகழ்கிறார்கள். இதற்கு இடமாயிருக்குங் காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றேபற்றி இந்தச் சமயத்திற் குரிமைபூண்ட எங்கள் சாதிப் பண்பை உலகச் சாதிப் பண்பெல்லாவற்றினும் உயர்பண்பாக அவர்கள் கணித்திருக்கின்றார்கள்.

இந்தப் பெருமை எங்களைக் கௌரவிக்கும் பெருமை. இது எங்களுக்கு வேறு எவ்வகையாலும் வாய்த்த பெருமையல்ல. சமயத்தால் மட்டும் வாய்த்த பெருமை. அதிலும் எங்கள் ஆலய பூஜை முறை எமக்குத் தேடித்தந்த பெருமை இது.

(நன்றி சித்தாந்தவிளக்கிற் சைவக் கிரியைகள்)


# R. சிவலோகநாதன் அன் கோ

இல: 6, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்

எங்களிடம் அரிசி ஆலைக்குரிய
இயந்திர வகைகளும்

ஸ்கூட்டர் உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு

கிளைகள்:

விநாயகம் அரிசி ஆலை, சுன்னுகம்
இராசம் அரிசி ஆலை, சுன்னுகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் தோத்திரத் திரட்டு

## தேவாரம்

### பண் — வியாழக்குறிஞ்சி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

### பண் — பியைந்தைக் காந்தாரம்

கரியின் மாமுக முடைய கணபதி தாதைபல் பூதந்
திரிய வில்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கைநன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்க ளேத்தும் ஒலிபுனற் காழிநன் னகரே.

— திருஞானசம்பந்தர்

### பண் — காந்தாரம்

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை.
அஞ்ச வருவது மில்லை.

## திருத்தாண்டகம்

கோவாய இந்திரனுள் ளிட்டா ராகக்
குமரனும் விக்கின விநாய கன்னும்
பூவாய பீடத்து மேல யன்னும்
பூமியளந் தானும் போற்றி சைப்பப்
பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம்பயம் நம்மூரென்று போயி னாரே.

— திருநாவுக்கரசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் — இந்தளம்

திங்கள் தங்கு சடையின் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய் திறவாள்;
கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலன் குமரன் பிள்ளை
தேவி யார்கோற் றட்டி யாளால்
உங்களுக்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் றளியு ளீரே.

— சுந்தரர்

## திருவாசகம்

பரந்துபல் ஆய்மல ரிட்டுமுட் டாதடி யேஇறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெற லாம்என்னும் அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேஉன்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே.

— மாணிக்கவாசக சுவாமிகள்

## திருவிசைப்பா

தனதனற் றோழா, சங்கரா. சூல
பாணியே, தாணுவே, சிவனே,
கனகநற் றூணே, கற்பகக் கொழுந்தே,
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே, குமர விநாயக சனக,
அம்பலத் தமரசே கரனே,
யுனகழ லிணையென் நெஞ்சினு ளினிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

— திருமாளிகைத்தேவர்

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

மாமலர் நாலையும் வட்டத்தின் மேவிடு
மாமலர் நாவினும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தி னுள்ளே
ஓமென விநாயகன் உலாவி நின்றானே.

— திருமூலர்

## பதினோராந் திருமுறை
## மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

— கபிலதேவநாயனார்

## திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
## கட்டளைக்கலித்துறை

முகத்தாற் கரியனென் றாலுந் தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென்றே மெய்ம்மை உன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூர் அம்மான் பயந்தஎம்மான்
உகந்தா னவன்ற னுடலம் பிளந்த ஒருகொம்பனே.

— நம்பியாண்டார்நம்பி

## பெரியபுராணம்

எடுக்கு மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

— சேக்கிழார் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளையாடற் புராணம்

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
 தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
 யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
 களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
 நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

— பரஞ்சோதி முனிவர்

## சேக்கிழார் புராணம்

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

— உமாபதி சிவாச்சாரியார்

## திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
 கப்பிய கரிமுக — னடிபேணி
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
 கற்பக வெனவினை — கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
 மற்பொரு திரள்புய — மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
 மட்டவிழ் மலர்கொடு — பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
 முற்பட வெழுதிய — முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
 அச்சது பொடிசெய்த — அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்ர மணிபடும்
 அப்புன மதனிடை — இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
 அக்கண மணமருள் — பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பர்தருந் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலித் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

— அருணகிரிநாதர்

அன்பளிப்புகள், பாவனைப் பொருட்கள்,
பாதணிகள், மின் விசிறிகள், மின் உபகரணங்கள்,
குளிர்சாதனப் பெட்டிகள், சைக்கிள்கள்,
கைக்கடிகாரங்கள்

அனைத்தும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

**சி. சின்னத்துரை அன் பிறதர்**

39, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அட்டகம்

(கச்சியப்ப முனிவர் அருளியது)

பந்த மகற்றும் அனந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி யிருந்து கரக்குமோ
சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாங் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம். (1)

உலக முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருள்எவன்அவ்
வுலகிற் பிறங்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன்அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரண மடைகின்றோம். (2)

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும்அத்
தடவு மருப்புக் கணபதிபொற்
சரணஞ் சரண மடைகின்றோம். (3)

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்றோம். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படுமப் பொருள்யாவன்
ஐய மின்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவின்
ஊட்டி விடுப்பான் எவன்அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியை
புரிந்து சரண மடைகின்றும், (5)

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேதமுடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன்எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்றும். (6)

மண்ணின் ஓர் ஐங் குணமாகி
வதிவான் எவன்நீ ரிடைநான்காய்
தண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன் வானிடைஒன்றும்
அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரண மடைகின்றும். (7)

பாச அறிவிற் பசுஅறிவிற்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பயிலப் பணிக்கு மவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியை
திகழச் சரண மடைகின்றும். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வெட்டுப் பாடல்களும் விநாயக புராணம் காசிபர் முதலியோர் அனுட்டித்த படலத்திற் காணப்படுகின்றன. "இவற்றை மூன்று நாட்கள் முப்பொழுதும் ஓதுபவர் எல்லாவகைப் பேறுகளையும் பெறுவர். எட்டு நாள்கள் ஓதுபவரும், சதுர்த்தியன்று எட்டுமுறை ஓதுபவரும் அட்டமா சித்திகளை அடைவர். நாடோறும் பத்துமுறையாக இரண்டு திங்கள் ஓதுபவர் அரசர் வசியமடைவர். அவ்வாறு இருபத்தொருமுறை ஓதுபவர் மக்கட்பேறு, கல்வி, செல்வம் முதலிய எல்லா நலன்களையும் பெறுவர்." என்று விநாயகப் பெருமான் காசிபர் முதலியோர்க்கு அருளினர்.

அன்பளிப்பு

கற்பகம்ஸ்

சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகமூர்த்தி பதிகம்

(நேரிசை வெண்பா)

சிற்றுணர்வாற் குற்றமென்ன செய்துளே னேனுமவை
முற்றுமினி நீபொறுத்தென் முன்னிற்பாய் — கற்றுயர்ந்தோர்
புந்திதனிற் றோன்றிப் பொழியுங் கருணைமதத்
தந்திமுகப் பிள்ளாய் சரண். 1.

சரணமலர் வாழ்த்தித் தமிழ்ச்சொலப் பெற்றார்க்கு
மரணபவ மாற்று மருந்தே — கிரணவரைக்
கொப்போதுந் தும்பிமுகத் தோங்காரத் துட்பொருளே
எப்போதுங் காப்பா யெனை. 2.

எனைத்துந் திருவருளா லீன்றளிக்குந் தேவே
நினைத்தன் பொடுதுதித்து நின்றோர் — வினைத்துன்ப
மாற்றுங் கயமுகத்து வள்ளால் விரைந்தெனையீ
டேற்றுஞ் சமைய மிது. 3.

சமையந்தொறு நிறைந்த தற்பரமே யன்பர்க்
கமையுந் தனித்தெள் ளமுதே — யுமைதந்த
கண்மணியே யானைமுகக் கற்பகமே பேரின்ப
விண்மணியே யாள்வாய் விரைந்து. 4.

விரைததும்பு ஞானமத வேழமுகத் தெந்தா
யுரைகடந்து நின்ற வொளியே — வரைவிளங்கப்
பாரதத்தை முன்னெழுதும் பாசாங் குசதரவென்
கோரதத்தை மாற்றியருள கூர். 5.

கூரியவேற் கண்ணார் கொடியமய லைத்தவிர்த்துச்
சீரியபே ரின்பத் திறனருளிப் — பாரிலெனை
நீயடிமை கொண்டு நிதங்காத் திடல்வேண்டும்
தூயமத வேழமுகத் தோய். 6.

தோயுங் களப சுகந்தமட வார்விரகப்
பேயுங் கவலைப் பிணியுமினி — யோயும்
படிபுரிந்து வேழமுகப் பண்ணவனே யென்னை
படிமைகொண்டு நீயாண் டருள். 7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளரி யுருவா யருவாய்ப்பே ரின்பத்
தெருளாய் முதியமறை தேடும் — பொருளாய
தந்திமுகத் தோனே தமியேன் குறித்தவரம்
வந்தினிது தந்துதவு வாய், 8.

வாயாலு லுத்தர்தமை வாழ்த்திவருந் தாமலெனை
நீயா தரித்து நிதங்காப்பாய் — வீயாத
தொண்டரித யாம்புயமாந் தூயமணிக் கோயில்குடி
கொண்டகண நாதவருள் கூர்ந்து. 9.

கூர்ந்தமதி தந்தடிமை கொண்டெனையாள் வேதமின்னஞ்
சார்ந்தறிய மாட்டாத் தனிக்களிறே — தேர்ந்து
நடைசிறந்த நின்சீர் நவிலுந் திறமை
யுடையதன்றே யெல்சிற் றுணர்வு. 10.

— மாம்பழக் கவிச்சிங்கர்


அன்பளிப்பு

எஸ். சிவஞானம் அவர்கள்
எரிபொருள் நிலைய உரிமையாளர்
காங்கேசன்துறை வீதி — சுன்னாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

(ஔவையார் அருளிச்செய்தது)

1. சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாட

2. பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்

3. பேழை வயிறும் பெரும்பா ரக்கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்

4. அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

5. நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

6. இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்ட முப்புரி நூல் திகழொளி மார்பும்

7. சொற்பதங் கடந்த துரியமெஞ் ஞான
அற்புத நின்ற கற்பகக் களிறே

8. முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டி

9. தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்

10. திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து

11. குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென

12. வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே

13. உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி

14. ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி

15. கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே

17. ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

18. ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே

19. இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி

20. மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவினா லுணர்த்திக்

21. குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து

22 மூலா தாரத்தின் மூண்டெழுங் கனலைக்
காலெ ழுப்புங் கருத்தறி வித்தே

23. அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி

24. இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி

25. சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்ஷமமும்
எண்முக மாக இனிதெனக் கருளி

26. புரியட் டகாயம் புலப்பட வெனக்குத்
தெரியட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்

27. கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி

28. என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து

29. வாக்கு மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்

30. திருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருடரு மானந்தத் தழுத்தி யென் செவியில்

31. எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்

32. சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
34. வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
35. அஞ்சக் கரத்தின் அரும்பொரு டன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்துத்
36. தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகரகவல் முற்றிற்று

உரவகைகள், கிருமிநாசினி வகைகள்,
கோழித்தீன் வகைகள், மற்றும் 'லீலா' அரிசி
'லீலா' சுருட்டு, திறப்புகையிலை, சுத்தமான
நல்லெண்ணெய் முதலியவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும் எப்பொழுதும்
பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்

லீலா ஸ்ரோஸ்

காங்கேசன்துறை வீதி — சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி
# ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

தள்ளா விளையுளும், தாழ்விலாச் செல்வரும், தக்காரும் நிறைந்த பலாலிக் கிராமத்தின் குலதெய்வம் சித்திவிநாயகர். பரந்து விளங்கும் பலாலிக் கிராமத்தின் இருதயம் போன்று கிராம மத்தியில் ஆலயம் அமைந்துள்ளது. தகநாரோடை என்னுங் குறிச்சி, ஆலயத்தைத் தாங்கியிருக்கும் பேறுக்குரியது. பல நூறு வருடங்களாக, அந்நியர் ஆட்சியிலும் அசைவுறாது நின்று அருள்பாலிப்பது. புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறி யொழுகச் செய்யும் கந்தபுராண படனம் நினைப்பிற் கெட்டா நெடுங்காலமாக நடைபெற்ற சிறப்புடையது. சிவாகம சமுத்திரத்தில் முழுகித்திளைத்து கிரிதீபமாய்ப் பிரகாசித்த அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களாலும் அவர்போன்ற பெரியோர்களாலுக் பலமுறை சங்காபிஷேகம் செய்யயிபெற்ற சாந்நித்தியமுடையது. நித்திய நைமித்திய பூசைகளும், சதுர்த்தி, சித்திரா பூரணை, திருவெம்பாவை முதலிய திருவிழாக்களும் அன்னதானம் போன்ற நிகழ்ச்சிகளும் அவ்வப்போது தவறாது நிகழும் அருட்பொலிவுடையது.

இத்தகைய ஆலயம் 1935 ஆம் ஆண்டில் கல் திருப்பணியினால் புதுப்பிக்க வேண்டுமென அன்பர்கள் முயன்றனர். ஆனால் அவர்கள் முயற்சி முற்றுப்பெறத் திருவருள் கைகூடவில்லை. அன்று திருப்பணிக்கென வருவிக்கப்பட்ட கற்கள் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு உபயோகப்பட்டன. அப்பொழுது சீமெந்தினாலும், சுண்ணாம்பினாலும் பழுது பார்க்கப்பட்டு, அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக அர்ச்சகராக இருந்து ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுக்கு பூஜை ஆற்றிய அனுபவத்திற்குரிய பிரம்மஸ்ரீ சு. கு. சபாரத்தினக் குருக்கள் அவர்களால் அன்றைய கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

பிரணவ சொரூபராய், சகல செயல்களையும் முட்டின்றி முடித்து வைக்கின்ற சித்திவிநாயகப் பெருமானின் ஆலயம் பல வருடங்களாகத் திருத்தவேலைகள் எதுவும் செய்யாதிருந்த காட்சி அடியவர் பலரின் மனதைப் புண்படுத்தியது. சித்திவிநாயகப் பெருமானின் ஆலயம் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்யவேண்டுமென்ற எண்ணம் எல்லோர் மனதிலும் உதயமானது. 1976 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டன. எம்பெருமானின் திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருளாலும் அடியவர்களின் உதவியாலும் சகல திருப்பணிகளும் நிறை வேற்றப்பட்டுவருகின்றன.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது எல்லோரும் அறிந்தது. முன்னவனுர் கோயிற்பூசை முட்டிடின் (குறைவுபடின்) உளதாகும் பலாபலன்களும் நாமறிந்ததே. ஆதலின் ஆனைமுகப் பெருமானின் ஆலயத்திருப்பணிகளுக்கு உதவியும், பூஜா காரியங்களுக்கு ஊக்கமளித்தும் ஆலயத்தைப் புத்தெளிகாலச் செய்வது பலாவிவாழ் பெருமக்களின் கடமையாகும். வானுலகும் மண்ணுலகும் வாழ; மறை வாழ; பயன்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க; ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின திருவடிகளை வணங்கி வாழ்வோமாக.

ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்
தொண்டர்கள

சீர்கொண்ட கிரணசந் திரசடா
மகுடமுந் திரியம்ப காம்போஜமுந்
திடகரட கடவிகட ஐயகும்ப
கெம்பீர திவ்வியகுஞ் சரவதனமுந்
தார்கொண்ட பரியள சதுர்ப்புய
விலாசமுந் தரளவெக் ஞோபவீத
தடமார்ப லம்போ தரப்ரவா
கமுமுசித தவளாம்ப ரானந்தமுங்
கூர்கொண்ட பாசாங் குசாஸ்தமுங்
கிண்கிணி குலுங்குபத முங்கண்டியான்
கும்பிட் டிறைஞ்சலருள் கூர்ந்துதவ
வேண்டுநய குணசகல பரிபூரண
வார்கொண்ட களபதன வல்லபை
மஞேகரா வளமுறுந் துறைகடோறு
மருவுபிர ணவவேத சொரூபசம
ரசந்த வரதசிவ கணநாதனே.

— விநாயகமூர்த்தி பதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

விநாயகப் பெருமானின் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வதற்குப் பொருளுதவி, பண உதவி, சரீர உதவி புரிந்தவர்களுக்கும்,

ஆலய வேலைகளைச் சிறப்புறச் செய்து நிறைவேற்றிய சிற்பாசாரியார்கள் மு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், செ. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும், அவர்களது உதவியாளர்களுக்கும்,

ஆலய கும்பாபிடேகக் கிரியைகளை ஒழுங்காக நிறைவேற்ற அல்லும் பகலும் சிரமம் பாராது கடமைபுரிந்த சிவாச்சாரியர்களுக்கும்,

இம்மலர் மலர்வதற்கு விளம்பரங்கள், பணஉதவி யாகியன தந்துதவிய அன்பர்களுக்கும்,

இம் மலர் சிறம்புற உருப்பெறுவதற்கு ஆசியுரைகள், கட்டுரைகள், பாக்கள் ஆகியன தந்துதவிய பெரியார்களுக்கும்,

மலரின் உள்ளடக்கங்களைச் சிறப்பாகச் சீரமைத்து வெளியிடுவதக்கு உதவிய அன்பன் வ. பேரின்பநாயகம் அவர்களுக்கும், விளம்பரம் சேகரிக்க உதவிய அன்பர்கள் க. சிவலோகநாதன், வ. சிவலிங்கம். மு. கணேசு ஆகியோருக்கும்,

மலரை அழகுற அச்சிட்டுதவிய சுன்னாகம் சக்தி அச்சகத்தாருக்கும் எமது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் அவர்களுக்குச் சித்திவிநாயகரின் அருள் பாலிக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம்.

வணக்கம்

பனாலி,
21-8-80.

இங்ஙனம்,
விநாயகனடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவான விலையில் சிறந்த ருசிகரமான

தேயிலைக்கு

எப்பொழுதும் நாடவேண்டிய இடம்

# கோல்டன் ஏஜென்சீஸ்

காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.

---

உங்கள் சகலவிதமான பாவனைப்
பொருட்களையும், பாடசாலைப் பிள்ளைகளுக்குத்
தேவையான கொப்பிகள், உபகரணங்களையும்
மலிவான விலையில் பெறுவதற்கு

என்றும் நாடவேண்டிய இடம

# சுந்தரம்ஸ் ஸ்ரோஸ்

யாழ். வீதி — பலாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் குணம் நிறைந்த பவுடர்

சிங்கம்ஸ் ரஸ்கம் பவுடர்

கங்கை ரஸ்கம் பவுடர்

வெண்மைக்குச் சிறந்த சோப்

கங்கை சோப்

சன்வைற் சோப்

தயாரிப்பாளர்கள்

ஆர். கே. எஸ்.

இன்டஸ்றீஸ்

கோண்டாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பளிப்பு

அருளெனும் கடல்முகந் தடியர் சிந்தையாம்
பொருள்பெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழை உதவுசெவ் வந்தி யானையின்
திருவடி இணைமலர் சென்னி சேர்த்துவாம்.

## E. சின்னத்துரை அவர்கள்

முகவர்

இலங்கை உரக் கூட்டுத்தாபனம்

மயிலிட்டிதெற்கு — தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

திரு. க. குமாரசாமி
இணுவில்

அன்பளிப்பு

லிங்கம் ஸ்ரோஸ்
இணுவில்

அன்றாட பாவனைப் பொருட்கள், உரவகைகள்,
கிருமிநாசினிகள், பாடசாலைப் பிள்ளைகளுக்கான
உபகரணங்கள் மலிவான விலையில்
பெறுவதற்கு சிறந்த இடம்

# அம்பிகா ஸ்ரோஸ்

உரிமையாளர்: எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

கொவ்வாவத்தை வீதி — பலாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 DEC 2018
3440

கூட்டுறவாளர்களே, — நாட்டுயர்வுக்காக

தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை

உள்ளூராட்சித் தொழிற்பரப்படங்கிலும்

சேவைபுரியக் காத்திருக்கின்றது

# தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

தங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய

நுகர்ச்சிப்பொருட்கள், புடைவை தினுசுகள், உபகரணங்கள்,
கிருமிநாசினிகள், கோழித்தீன் வகைகள், கட்டடப்பொருட்கள்,
எரிபொருள் வகைகள், பாடசாலைப் புத்தகங்கள்.
அப்பியாசக் கொப்பிகள், உபகரணங்கள்
ஆகியவற்றை விற்பனை செய்கின்றது.

சங்கத்தின் சேவையைப்பெற்று, உங்கள் தேவையைப் பூர்த்திசெய்ய
முந்துங்கள் பயன் உங்களுக்கே.

சுத்தமான சுவையான உணவு வகைகள்
சூடான, குளிரான பான வகைகள்
அனைத்திற்கும் சிறந்த இடமென்று யாவரும் போற்றுவது

## கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலையையே

நாடு போற்ற நற்பணி புரிந்து வீடு சிறக்க வளங்கள் குவிக்கும்

# தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

தொலைபேசி இல. 343 சுன்னாகம் — தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

## திருக்கோவிலை வழிபடுங்கள்

## திருமுறைகளை ஓதுங்கள்

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் நற்பணிக்கே உதவுகின்றது:

# மில்க்வைற் தொழிலகம்

யாழ்ப்பாணம்.

சக்தி அச்சகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org